கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30



# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 6 - ஒலி 06 | 05-02-2023



# இல்லாமையே இறைவன்



# வீழ்வேன் என்று நினைத்தாயா?



## தலையங்கம்

அருட்பணி. சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை சகோதர சகோதரிகளே இந்த வார இணைய இதழின் வழியே உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகவும் ஆனந்தம்.

சக மனிதனின் அருகாமையும், அவர்களின் அன்புமே உலகில் எந்த ஆளுமைக்கும் மிக அத்தியாவசியம். வாசகப் பெருமக்களாகிய உங்களின் இந்த ஆதரவுதான் எங்களை மேலும் உற்சாகத்தோடு பணியாற்ற உயிர்ச்சத்தாக உள்ளது. அதற்காக நாங்கள் உங்களுக்கு மிகவும் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்.

நாம் அனைவரும் மகிழ்ச்சியாக வாழவே ஆசைப்படுகின்றோம். அது நியாயம்தான். துன்பங்கள் எதுவும் நம் வாழ்வில் நேராதவாறு முன்னெச்சரிக்கையோடும், விவேகத்தோடும் வாழவே எந்த உயிரும் வாழ ஆசைப்படும். அதுவும் நியாயம்தான்.

நமது பிரார்த்தனையும் அதுவாகவேதான் இருக்கும். நமது அன்றாடு செபத்தில், அந்த நாள் முழுவதும் கடவுளே எந்தவிதமான துன்பமும் நேராதவாறு, எல்லாம் நல்லவிதமாக நடக்க ஆசிகூறும் என்று செபிப்போம்.

அதை மேலும் உறுதிப்படுத்தும்விதமாக, நல்ல சகுனம், ராசிபலன் பார்ப்போம். ராசியான பொருட்களை எடுத்துக் கொள்வோம். ராசியான மனிதர்களைப் பார்ப்போம். விவிலியத்தில் கூட நல்ல நல்ல வசனங்களை படிப்போம். அதோடு இயேசுவின் ரத்தம் ஜெயம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருப்போம். தப்பித்தவறி. எதாவது பிரச்சனை என்று வந்தால் உடனே கடவுளிடம் சென்று அவரின் உதவியை வெகு சிலரே கேட்பார்கள். அந்தத் துயரங்கள் தொடர் கதையாகிப் போனால், நமது நம்பிக்கை பலவீனமாகிக் கொண்டே போகும், இறுதியில் கடவுள், ஆலயம், செபம் இவைகள் எல்லாம் தூரத்துச் சொந்தங்களாகிவிடும். இதிலிருந்து தப்பிக்க நமது மனம் செல்போனுக்குள் தன்னைப் புதைத்துக் கொள்ளும். நேரம் காலம் தெரியாமல் அதிலேயே மூழ்கிப்போவோம். அதற்கு அடிமையாவோம்.

நாம் தஞ்சம் புகும் எதுவும் நம்மீது ஆதிக்கம் செலுத்தும். கடவுளிடம் தஞ்சம் புகுந்தால் அவர் நம்மை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு நம்மை மீட்டெடுப்பார். மற்றவர்களிடமோ, மற்றவை களிடமோ நாம் அடைக்கலம் தேடினால அவைகள் நம்மை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும். நம்மை ஆட்டிப்படைக்கும்.

யஸர் ஒருவர் துயரத்திலும் எதார்த்தத்தோடு விழிப்புணர்வோடு ஒவ்வொன்றையும் கடந்து போகின்றார்களோ அவர்களைக் கண்டு துயரங்கள் வாய்பொத்தி நிற்கும்.

நாம் மகிழ்ச்சியாக இருக்கும்போது நமது சுற்றமும், நட்புவட்டமும் தரும் ஆதரவைவிட, நாம் நரகத்தினூடே நடக்கும்போது நமக்குத் துணையாக நிற்பவர்கள் நம் வாழ்வின் பொக்கிஷங்கள். அவர்களின் நம்பிக்கை வார்த்தைகள்தான் நமக்கு காரிருளின் நடுவில் பேரொளியாகும். பொதுவாக துன்பங்கள் வந்தால் சுற்றம் வேடிக்கை பார்க்கும், நட்புகூட சிறிது சிறிதாக அகல ஆரம்பிக்கும். இதை இதுதான் வாழ்வின் எதார்த்தம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதற்காக அவர்களை வெறுக்கவோ, பகைக்கவோ, சபிக்கவோ தேவையில்லை.

அத்தருணத்தில் நாம் நிதானமாக நமக்குள்ளும். நம்மைச் சுற்றியும் கூர்ந்து பார்க்க வேண்டும். ஏனென்றால் அந்தத் தருணங்களில்தான் இறைவன் பேரொளியாக நமக்கு இருக்கின்றார். பல கதவுகளை திறந்து வைத்து நமக்காகக் காத்திருப்பார்.

இழப்பும், ஏமாற்றமும், ஊனமும், இன்னும் சிறப்பாக இதைக் கூறவேண்டுமென்றால் சிலுவைகள்தான் நமக்குக் கொடுக்கப்படும் ஆசீர்வாதங்கள், நல்வாய்ப்புகள். நம்மிடம் இருக்கும் ஒன்று நம்மைவிட்டு வலிக்க வலிக்க பிடுங்கப்படுமென்றால். அதைவிட மிகச் சிறந்த ஒன்று வரப்போகின்றது என்று அர்த்தம்.நமது பலவீனங்களால் இல்லாமல் நமக்கு வரும் துன்பங்கள் அனைத்தும் இறைவனால் அனுமதிக்கப்படுபவை, அவற்றிற்குப் பின் நமது வாழ்வு குன்றிலிட்ட பெரும் ஜோதியாக மாறப்போகின்றது என்ற நம்பிக்கையை இறைவன் தருகின்றார்.

அஞ்சாதீர்கள், கவலைப்படாதீர்கள் என்று கடவுள் 365 தடவை திருவிவிலியத்தில் கூறியதாக நாம் வாசிக்கின்றோம்.

துயரப்படுகின்றவர்கள், துள்ளிக்குதிக்க வேண்டும். ஏனென்றால், கடவுள் நம்மை ஆசீர்வதிக்கப்போகின்றார் என்று புரிந்து கொள்ளவேண்டும்.

எப்போதும் ஆனந்தமாகவே வாழ வேண்டும் என்று விரும்புபவர்கள். முழுமையான வாழ்வை அவர்கள் அனுபவிக்க முடியாது.

கடவுள் கண்டித்துத் திருத்தும்போது அதை மகிழ்வோடு ஏற்றுக் கொள்பவர்களை கடவுள் உயர்த்துவார். அவரது கண்டனம் சிறிது நேரமே. ஆனால் அவர் தரும் பெருவாழ்வு மிகவும் உயர்ந்தது. தகுதியானதைப் பெற அவர் தகுதிப்படுத்திய பிறகே தருவார்.

ஒரு பெரிய சாதனைக்காக நம்மைத் தயார்படுத்தும் கடவுள் பல இழப்புகளையும், ஏமாற்றங்களையும், கண்ணீர் நிறைந்த காலங்களையும் தருவார். கடைசிவரை தாங்குப்பிடித்தால் யாருக்கும் கிடைத்திராத, நாம் கற்பனையிலும் எதிர்பார்க்காத அனைத்தையும் கடவுள் ஜஸ்ட் லைக்தட் கொடுப்பார்.

நம்மில் பெரும்பாலோனோர் ஸ்கார்லெட் லெட்டர் The Scarlet Letter என்ற உலகப் புகழ் பெற்ற புத்தகத்தைப் பற்றி அறிந்திருப்போம். அல்லது படித்திருக்கலாம். அந்தப் புத்தகத்தை எழுதியவர் அமெரிக்க எழுத்தாளர் நத்தானியேல் ஹாவ்தார்ன். அவர் இந்த காதல் நாவலை எழுதிய வருடம் 1850. அந்த நாவல் ஹெஸ்டர் பிரின் என்ற பெண்ணைபற்றியது. அவள் ஒருவருடன் காதல் வயப்பட்டு திருமணமாகாத நிலையில் அவனுக்கு ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொள்கின்றார். அதன்பிறகு நிராதரவாய் அவள் தன் வாழ்வில் பட்ட துயரங்களையும், தனது அறியாப்பருவத்தில் அவள் செய்த தவறைத் திருத்தி ஒரு மதிப்புக்குரிய வாழ்வை வாழ அவள் நடத்திய போராட்டத்தத்தை மையப்படுத்தியது.

அமெரிக்காவிலேயே முதல் முறையாக அதிக அளவு அந்தப் புத்தகம் அச்சிடப்பட்டதும் விற்பனையானதும் என்பது வரலாறு. இந்த நாவலை மையப்படுத்தி பல திரைப்படங்கள்

வெளிவந்தன, பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் வெளியிடப்பட்டது, மேடை நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. லாரன்ஸ் என்ற அமெரிக்க நாவலாசிரியார் இந்த நாவலைப் பற்றிக் கூறும்போது, இந்தக் காவியம் மிகச்சிறந்த படைப்பு அமைரிக்காவின் உச்சபட்ட கற்பனைக் காவியம் என்று கூறினார்.

இந்தப் படைப்பிற்குப் பின் ஒரு நிகழ்வு உண்டு. அது அசாதாரணமான நிகழ்வு. நத்தானியேல் ஹாவ்தார்ன் அவர்கள் ஒரு சுங்க அலுவலகத்தில் வேலை செய்து வந்தார். சூழ்நிலைகளின் காரணமாக அவர் அந்தப் பணியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.



வீடு திரும்பிய அவர் தனது மனைவியிடம் இதைத் தெரிவித்து கவலைப்பட்டார். இனி என்ன செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றப் போகின்றோம் என்று வருத்தப்பட்டார்.

இங்குதான் அந்தக் காரிருளில் பேரொளி அவரின் மனைவி சோஃபயா ஹாவ்தான் வடிவில் வந்தது. குடும்பத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள், இதுவரை நீங்கள் எனக்குக் கொடுத்த பணத்தில் சிறிது சேமித்து வைத்திருக்கின்றேன். நமது குடும்பத் தேவைகளுக்கு அதுபோது. அவற்றை நான் பார்த்துக் கொள்கின்றேன். நீங்கள் பல முறை எதாவது எழுத வேண்டும் என்று என்னிடம் கூறியிருக்கின்றீர்களே. இது ஒரு நல்ல வாய்ப்பு, இப்போது நீங்கள் அதை எழுத ஆரம்பிக்கலாமே என்று கூறினார்.

அதன்பிறகு நத்தானியேல் உலகப் புகழ்பெற்ற த ஸ்கார்லெட் லெட்டர் The Scarlet Letter என்ற இலக்கிய நாவலை எழுதினார்.

இதை அவர் படைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இயற்கை அவரின் ஆழ்மன ஆசையான எழுதவேண்டும் என்பதற்காக அவரை அவரது பதவியிலிருந்து விலக்கியது. நாம் ஆழமாக நினைப்பது நடந்தே தீரும். விரும்பியபடியே நல்லது நடக்கும், பயந்தபடியே அதுவும் நடக்கும். தீதும் நன்றும் பிறர் தர வாரா.


நமக்கு நடக்கும் அனைத்தும் நமது நன்மைக்காகத்தான். இதை அறியாமல்தான் நாம் துன்பங்களை விரும்புவதில்லை.

ஆனால் இயேசு சிலுவையைத் தேடி வந்தார். அதையே விரும்பித் தேர்ந்து கொண்டார். இயேசுவை நம்பும் எவரும், அல்லது வாழ்வில் உயர வேண்டும் என்று விரும்புபவர்கள் யாரும் சிலுவை, துன்பங்களைக் கண்டு அஞ்ச மாட்டார்கள்.

சிலுவைகளின்றி சிகரம் தொடமுடியாது. விவேகமானவர்கள், புத்திசாலிகள் இதை நாம் விரும்புவோம்.

**"God is most glorified in us when we are most satisfied in Him"**

**- John Piper -**



# விவிலியம்
## அறிவோம்-75



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## திருஅவைமரபில் விடுதலைப் பயணம் நூல்

தொடக்க நூல் இந்தப் பிரபஞ்சம் படைக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகிறது; விடுதலைப் பயணம் நூல் இஸ்ரயேல் இனத்தின் படைப்பைப் பற்றிக் கூறுகிறது. இந்நூல் எவ்வாறு இஸ்ரயேல் மக்கள் கடவுளின் மக்களாக, உடன்படிக்கை மக்களாக, ஓர் இனமாக உருவானார்கள் என்பதைப் பதிவுசெய்கிறது. சுருக்கமாகக் கூறினால் விடுதலைப் பயணம் நூல் இஸ்ரயேல் மக்களின் அடிப்படை வரலாற்று நிகழ்வுகளைக் கூறுகின்றது எனலாம். திருஅவைமரபில் கிறிஸ்தவ நம்பிக்கையின் வளர்ச்சியில் விடுதலைப் பயணம் நூல் பெரும் பங்கு வகித்திருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. திருஅவையில் நடத்தப்படுகின்;ற வார்த்தை வழிபாடுகளில் விடுதலைப் பயணம் நூல் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதையே இதற்கு உதாரணமாகக் கூறலாம். மேலும் விடுதலைப் பயணம் நூலை புதியஏற்பாட்டில் வருகின்ற நற்செய்தி நூல்களுடன் ஒப்பிட்டுப் பேசலாம். குறிப்பாக,எகிப்திலிருந்து விடுதலை, பாலைவனப் பயணத்தின்போது நிகழ்த்தப்பட்ட வல்ல செயல்கள் மற்றும் திருஉறைவிடம் பற்றிய செய்திகள் போன்றவை மாதிரி கோட்பாட்டின் (மிீ஗்ஸீலியிலிஆதீ) அடிப்படையில் புதியஏற்பாட்டு நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி விளக்கப்படுகிறது. இதன்படி பழையஏற்பாட்டு நிகழ்வுகள் பல புதியஏற்பாட்டு நிகழ்வுகளில் தொடர்வதையும் நிறைவுக்கு வருவதையும் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் விடுதலைப்பயணம் நூலில் காணப்படும் பலநிகழ்வுகள் திருஅவையில் பின்பற்றப்படுகின்ற அருட்சாதனங்களின் முன்னோட்டங்களாக உள்ளன. உதாரணமாக, பாஸ்காவிழா, செங்கடலைக் கடக்கும் நிகழ்வு, மன்னா, பாறையிலிருந்து தண்ணீர், சீனாய் உடன்படிக்கைச் சடங்கு மற்றும் திருமுன்னிலை அப்பம் ஆகியவற்றைக் கூறலாம்.

முதலாவதாக பாஸ்கா விழாவின்போது பலியிடப்படுகின்ற ஆடு இயேசுவின் பாடுகளை முன்னறிவிப்பதாக உள்ளது. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெறுவதற்கு முக்கிய காரணங்களாக யாவேகடவுள் எகிப்தியர்கள் மீது ஏவிய பத்து பெருந்துன்பங்களைக் கூறலாம். குறிப்பாக, இறுதிப் பெருந்துன்பமான தலைமக்கள் சாவிற்குப் பிறகுதான் பார்வோன் இஸ்ரயேல் மக்களை விடுவிக்கிறான். இதுவே பாஸ்கா கடத்தல் என அழைக்கப்படுகிறது. இறுதிப் பெருந்துன்பத்தைக் கடவுள் செயல்படுத்தும் நேரத்தில் இஸ்ரயேல் மக்கள் பலியிடப்பட்ட பாஸ்கா ஆட்டின் இறைச்சியை உண்டார்கள் (விப 12-13). திருஅவையின் தொடக்கத்திலிருந்தே இந்த பாஸ்கா உணவு, இயேசுவின் இறுதி இராவுணவு (மத்தேயு 26; மாற்கு 14; லூக்கா 22) மற்றும் இயேசுவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பால் ஏற்பட்ட பாவம் மற்றும் சாவிலிருந்து பெற்ற விடுதலைக்கு முன்னோடியாகப் பார்க்கப்பட்டது. ஏனெனில் பழையஏற்பாட்டில் நிகழ்ந்த பாஸ்கா கடத்தலுக்கும் இயேசுவின் பாடுகள் மற்றும் இறப்பிற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன.பாஸ்கா ஆடு மாசுமறுவற்றதாக உள்ளதைப்போல இயேசுவும் மாசுமறுவற்ற, உலகின் பாவங்களைப் போக்குகின்ற கடவுளின் ஆட்டுக்குட்டி (யோவான் 1:19; 1 பேதுரு 4:15).

பாஸ்கா ஆடு பலியிடப்பட்ட நிசான் மாதம் 14 அல்லது 15 ஆம் நாளில்தான் இயேசுவும் சிலுவையில் அறையப்படுகிறார் (மத்தேயு 16:1-2; யோவான் 13:1-2).

பாஸ்கா ஆட்டின் எலும்புகள் முறிக்கப்படாததைப் போல இயேசுவின் எலும்புகள் எதுவும் முறிக்கப்படவில்லை (யோவான் 19:36). பாஸ்கா ஆட்டின் இரத்தம் கதவுநிலைகளிலும் மேல் சட்டத்திலும் ஈசோப்பினால் பூசப்பட்டது (விப 12:7); இயேசு சிலுவையில் தொங்கியபோது ஈசோப்புத் தண்டில் பொருத்தி கசப்பான காடி குடிக்கக் கொடுக்கப்பட்டது (யோவான் 19:17-18, 29). பாஸ்கா விழாவில் புளிப்பற்ற அப்பத்துடன் இறைச்சியை உண்டார்கள் (விப 12:8); நிலைவாழ்வு பெறுவதற்கு சீடர்கள் இயேசுவின் சதையை உண்ணவேண்டும் (யோவான் 6:53-58). பாஸ்கா விழா நிலையான நினைவு விழாவாகக் கொண்டாடவேண்டும் (விப 12:14); இயேசுவின் கடைசி இராவுணவு நிகழ்வை, இதை என் நினைவாகச் செய்யுங்கள் (லூக்கா 22:19-20; 1 கொரிந் 11:23-25) என சீடர்களுக்குக் கட்டளையாகக் கொடுக்கின்றார். இந்த ஒற்றுமைகளால் இயேசுவின் பாடுகளும் இறப்பும் பாஸ்கா விழாவுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட்டன. புனித அகுஸ்தீனார் கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தால் நம்முடைய கதவு நிலைகள் பூசப்பட்டு, நமது நெற்றிகளில் அடையாளமிடப்பட்டு, இந்த உலகின் அழிவிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம்; இதை சிறையிலிருந்து விடுதலை அல்லது எகிப்தின் அழிவிலிருந்து விடுதலைக்கு ஒப்பிடலாம். இதன் விளைவாக, நாம் அலகையின் ஆதிக்கத்திலிருந்து கிறிஸ்துவுக்குள் வருகிறோம்; ஒரு தள்ளாடும் உலகத்திலிருந்து மிகவும் உறுதியான அரசிற்குள் நுழைகிறோம் என இதைவிளக்குகிறார்.

இரண்டாவதாக, திருஅவை தந்தையர்கள் இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடக்கும் நிகழ்வை திருமுழுக்கிற்கு முன்னடையாளமாகப் பார்த்தார்கள். திருமுழுக்கு தூய ஆவியாரின் வல்லமையால் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரமான கடவுளின் மக்கள் என்ற நிலைக்குக் கடந்து வருவதைக் குறிப்பதாகக் கருதப்பட்டது. இந்தப் புரிதலை முதல்முதலாக புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் வெளிப்படுத்துகிறார்: சகோதர சகோதரிகளே, நீங்கள் ஒன்றை அறிந்திருக்கவேண்டும் என விரும்புகிறேன். நம் முன்னோர் அனைவரும் மேகத்தின்கீழ் வழிநடந்தனர். அவர்கள் அனைவரும் கடலைக் கடந்து சென்றனர். அவர்கள் அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி மேகத்தாலும் கடலாலும் திருமுழுக்குப் பெற்றார்கள். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிக உணவை உண்டனர். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிகப் பானத்தைப் பருகினர் (1 கொரிந் 10:1-4அ). புனித பவுலின் இந்தப் புரிதல் தொடக்கத் திருஅவையில் எதிரொலித்தது. செங்கடலைக் கடக்கும் நிகழ்வு திருமுழுக்கு மறையுண்மைக்கான ஒரு மாதிரியாக பார்க்கப்பட்டது.

மூன்றாவதாக, பாலைவனப் பயணத்தின்போது கடவுள் வழங்குகின்ற உணவான மன்னா இயேசு ஏற்படுத்திய நற்கருணையின் முன்னோட்டமாகப் பார்க்கப்படுகிறது. யோவான் எழுதிய நற்செய்தியில் இயேசு தன்னை வானிலிருந்து இறங்கிவந்த உணவாக வெளிப்படுத்துகிறார். அந்த உணவை கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அளித்த மன்னாவுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

வாழ்வுதரும் உணவு நானே. உங்கள் முன்னோர் பாலைநிலத்தில் மன்னாவை உண்டபோதிலும் இறந்தனர். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த இந்த உணவே. விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வுதரும் உணவு நானே. இந்த உணவை எவராவதுஉண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன் ... எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம்.... வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர். உண்பவரை என்றும் வாழச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த இந்த உணவே. இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்துபோனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர் (யோவான் 6:48:55, 57-58) எனக் கூறுகிறார்.

கடந்த காலத்தில் கடவுள் செய்த வல்லசெயல்கள் புதியஏற்பாட்டிலும் தொடர்கின்றது. மன்னா கடவுளால் விண்ணிலிருந்து பொழியப்பட்ட அதிசய உணவாகப் பார்க்கப்பட்டது. அப்படியென்றால் நற்கருணையும் ஓர் அடையாளம்; உண்மையாகவே மீட்பளிக்கும் இறைஉணவு. இரண்டிலும் ஒரு வித்தியாசமும் இருக்கிறது. பாலைவனத்தில் அவர்கள் உண்ட மன்னா உணவு உடலை வளர்த்தது; அதை உண்ட முன்னோர் இறந்தனர் (யோவான் 6:58); புதிய மன்னாவான நற்கருணையை உண்பவர்கள் இறப்பைக் காண்பதில்லை. அவர்கள் நிலைவாழ்வைப் பெறுவர் (யோவான் 6:51).

நான்காவதாக, பாலைவனப் பயணத்தின்போது கடவுள் தாகத்தினால் தவித்த இஸ்ரயேல் மக்களுக்கு மோசே வழியாகப் பாறையிலிருந்து தண்ணீர் பெற்றுத் தருகிறார் (விப 17:1-5). புனித பவுல் இதைக் குறிப்பிடுகையில், பாலைவனத்தில் இஸ்ரயேல் மக்கள் ஆன்மீக பானத்தைப் பருகினர் என்றும் அந்தப் பானம் அவர்களைப் பின்தொடர்ந்து வந்த ஆன்மீகப் பாறையிலிருந்து கிடைத்த பானம் எனவும், கிறிஸ்துவே அப்பாறை என அவர்களைப் பின்தொடர்ந்துவந்த ஆன்மீகப் பாறையைக் கூறிப்பிடுகின்றார் (1 கொரிந் 10:1-4). திருஅவைத் தந்தையர்கள் புனித பவுலின் கருத்துக்களை வழிமொழிந்தனர். மேலும் புதிய உடன்படிக்கையில் அரும் செயல்களை புதிய உடன்படிக்கை குருக்கள் நடுநிலையாளர்களாக இருந்து பணிபுரிய கடவுள் செய்துள்ளார் என்கின்றனர். புனித.அம்புறோஸ் இதைக் கூறுகையில் பின்வருமாறு கூறுகிறார்:

தண்ணீர் இல்லாத காரணத்தால் யூதர்கள் தாகத்தால் முணுமுணுத்தார்கள். கடவுள் மேசேயிடம் அவரது கையிலிருக்கும் கோலினால் பாறையை அடிக்கக் கட்டளையிட்டார் மோசே பாறையை அடித்தார். தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. திருத்தூதர் பவுல் இதைப் பற்றிக் கூறுகையில், தங்களைப் பின்தொடர்ந்து வந்த ஆன்மிகப் பாறையிலிருந்து அவர்கள் பருகினார்கள். கிறிஸ்துவே அப்பாறை (1 கொரிந் 10:4) என்கிறார். கிறிஸ்து உங்களைப் பின்பற்றும்படி நீங்களும் குடிக்கிறீர்களா? நீங்கள் மறைபொருளைப் பார்க்கிறீர்கள். மோசே ஓர் இறைவாக்கினர்; அவரது கையிலிருந்த கோல் இறைவார்த்தை. குரு இறைவார்த்தையால் பாறையை அடிக்கிறார். தண்ணீர் வழிந்தோடுகிறது; கடவுளின் மக்கள் குடிக்கின்றனர். குரு கிண்ணத்தைத் தொடுகின்றார்; கிண்ணம் நிறைவாழ்வைத் தருகின்ற தண்ணீரால் நிறைகிறது.

தொடக்கத் திருஅவையில் அருட்சாதனங்கள் அரும் செயல்களாகப் பார்க்கப்பட்டுள்ளன என்பது இதன் மூலம் தெரிகிறது. அவை விடுதலைப் பயணத்தில் நிகழ்ந்த அரும்செயல்களின் மாதிரிகளாக, வகைகளாகப் பார்க்கப்படுகின்றன. அருட்சாதன மறையுண்மைகளுக்கும் விடுதலைப் பயண அரும்செயல்களுக்கும் தொடர்புகள் கொடுக்கப்படுகின்றன.

ஐந்தாவதாக, திருஉறைவிடத்தில் நிகழ்த்தப்பட்ட வழிபாடுகளும் மாதிரிகளாக விளக்கப்படுகின்றன. குறிப்பாக, திருஉறைவிடத்தில் வைக்கப்பட்ட திமுன்னிலை அப்பம் (விப 25:23-30) சீனாய் மலையுச்சியில் இஸ்ரயேலின் தலைவர்கள் ஆண்டவருடன் உண்ட உடன்படிக்கை விருந்தின் நினைவாக வைக்கப்பட்டது (விப 24:9-11). தொடக்கத் திருஅவையில் நற்கருணை விருந்தில் பகிரப்படுகின்ற அப்பத்திலும் திராட்சை இரசத்திலும் இயேசுவின் பிரசன்னம் இருக்கிறது என்பதற்கு இது மாதிரியாகப் பார்க்கப்பட்டது. எருசலேம் நகர்சிரில் இந்த மறையுண்மையைகீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

பழையஏற்பாட்டில் திருமுன்னிலை அப்பம் பயன்படுத்தப்பட்டது. அது முடிவுக்கு வந்துவிட்டது. புதியஏற்பாட்டில் ஆன்மாவையும் உடலையும் அர்ச்சிக்கும் வானக அப்பமும் மீட்பின் கிண்ணமும் உள்ளன.... அப்பமும் திராட்சை இரசமும் வெறுமனே அப்பமும் இரசமுமல்ல மறாக ஆண்டவரின் கூற்றுப்படி அவை கிறிஸ்துவின் உடலும் இரத்தமும் ஆகும் ... பார்வையிலும் சுவையிலும் அப்பமாகத் தெரியும் இந்த அப்பம் வெறும் அப்பமல்ல மாறாக கிறிஸ்துவின் உடல். பார்வையிலும் சுவையிலும் திராட்சை இரசமாக இருந்தாலும் இந்த இரசம் திராட்சை இரசமல்ல மாறாக கிஸ்துவின் இரத்தம்.

எபிரேயமொழியில் திருமுன்னிலைஅப்பம் திருமுக அப்பம் **(lehem ha-panim)** என அழைக்கப்படுகிறது. ஆண்டவரின் முன்னிலையில் உண்ட உடன்படிக்கை விருந்தின் நினைவாக வைக்கப்பட்ட அப்பம் இது. இது நற்கருணையில் நிறைவுபெறுகிறது. இவ்வாறு விடுதலைப் பயண நிகழ்வுகளில் பலநிகழ்வுகள், அரும் செயல்கள், வழிபாடுகள் திருஅவை வரலாற்றில் அருட்சாதனங்களுக்கு மாதிரிகளாக, முன்னடையாளங்களாகப் பார்க்கப்பட்டு பயன்படுத்தப் பட்டு வந்துள்ளதை பார்க்கமுடிகிறது.

பயணம் தொடரும்...

**அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF**



மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ராபர்ட்**

உதவிப்பங்குத்தந்தை

**புனித விண்ணரசி அன்னை ஆலயம்**

மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்

பொதுக்காலம்
5–ஆம் ஞாயிறு
05–02–2023

| | |
|---|---|
| முதல் வாசகம் | **எசாயா 58:7–10** |
| இரண்டாம் வாசகம் | **1 கொரிந்தியர் 2:1–5** |
| நற்செய்தி வாசகம் | **மத்தேயு 5:13–16** |

# ஞாயிறு மறையுரை

## இழப்போம்

மடிகின்ற விதைதான் புதிய உயிரை தரமுடியும்
உருகுகின்ற மெழுகால் தான் ஒளியைத்
தர முடியும்
சூடுபட்டால் தான் மூங்கிலும் புல்லாங்குழலாகும்
அரைத்தால் தான் சந்தனமும் மணம் தரும்
உளிபடும் போது தான் கல்லும் சிற்பமாகும்.


ஒன்றை இழக்கும் போது தான் மற்றொன்று என்பதை இவைகள் மட்டுமல்ல இயேசுவும் உணர்த்திவிட்டார். நமக்காக இழந்தார், தன்னையே இழந்தார், அன்பிற்காய் இழந்தார். பொதுக்காலம் 5–ம் வாரத்தில் அடியெடுத்து வைக்கக்கூடிய நம்மை இறைவன் இழக்க அழைக்கின்றார்.

அன்று பேருந்து விபத்தில் உயிரிழந்த 34 பேரில் அந்தோணியும் ஒருவன். இவன் மேரியின் மகன். அரசு உயிரிழந்த குடும்பங்களுக்கு 10000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்தது. கூட்டம் கூடியது. ஒவ்வொருவராக வந்து பணத்தைப் பெற்றனர். மேரியும் வந்தாள். ஆனால் பணத்தை வாங்க மறுத்தாள். என் மகன் இன்னும் சாகவில்லை இன்றும் உயிரோடு தான் இருக்கின்றான் என உரக்க கத்தினாள். பைத்தியம் பிடித்து விட்டதோ என்று நினைத்த மக்களுக்கு மேரியின் பதில் இவ்வாறாக இருந்தது. என் மகன் உயிர் வாழ்ந்த காலங்களில் எத்தனையோ பேருக்கு இரத்ததானம் செய்துள்ளான். ஏன் அவன் இறந்த பிறகு கூட அவனது உடலுறுப்புகள் பலருக்கு பொறுத்தப்பட்டுள்ளன. எனவே என் மகன் உயிரோடு தான் இருக்கின்றான் என்றாள். அவளது அன்பின் உச்சக்கட்ட வார்த்தைகளை கேட்டு அரங்கமே அதிர்ந்தது. அப்பொழுது இதைக்கேட்டு உயிரிழந்த அந்தோணியின் கண்களும் அழுதன. ஏனெனில் அது ஒரு சிறுமிக்கு பொறுத்தப்பட்டு இருந்தது. இழந்தும் வாழ்வது என்பது இயேசுவுக்கு பிறகு அந்தோணிக்கும் வசப்பட்டுவிட்டது. இயேசு பிறர் வாழ தன் உயிரையே இழந்தார். அன்பிருந்தால் பிறர் வாழ வேண்டும் என்ற எண்ணமிருந்தால் இழத்தலும் கூட இனிமையானதே.

இன்றைய முதல் வாசத்தில் பார்க்கின்றோம் எவன் ஒருவன் ஏழை, எளியவரின் அடிப்படைத் தேவைகளான வயிற்றுப்பசியை உயிரைவிட மேலான உரிமைகளை சுயமதிப்பை சுயமரியாதையைச் சொல்லித்தந்து துன்புறுகிறவர்களுக்காக தன்னை இழக்கின்றானோ அவனே இறைவனின் பார்வையில் இருளின் நடுவே கலங்கரைத் தீபமாய்த் திகழ்வான் என எசாயா கூறுகிறார். இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் சிலுவையின் மேன்மையை எடுத்தியம்புகிறார். அற்புதமான அந்த சின்னத்தின் வழியாக எனக்குரிய அனைத்தையும் அயலாருக்காக நான் இழந்து விட்டேன் என்கிறார்.

இன்றைய நற்செய்தியிலும் நாம் நம்முடைய வாழ்வில் எப்படி இழக்க வேண்டும் என விளக்கம் தருகிறார். உலகிற்கு உப்பு நீங்கள் ஒளி நீங்கள் என்கிறார். உப்பு எவ்வாறு எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி தன்னை இழந்து சுவை தருகிறதோ எதையும் பெறாமல் ஒளி எவ்வாறு அனைவருக்கும் வெளிச்சத்தைத் தருகிறதோ அதைப்போல நாமும் வாழவேண்டும் என்பது தான் தன்னையே இழந்த இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது. அவருடைய ஆசையை நமதாக்குவோம்; இழப்போம் நாமும் பலருக்கு வாழ்வாவோம்.

– ஆமென்



# பொதுக்காலத்தின் 5-ஆம் ஞாயிறு

எசா. 58:7-10, 1 கொரி. 2:1-5, மத். 5:13-16

**05-02-2023**

## திருப்பலி முன்னுரை




பா. சேவியர்
திண்டுக்கல்


கிறிஸ்துவின் சிலுவையே நமது மகிமை என்பதை இவ்வுலகிற்கு பறைசாற்றி வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 5-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

உப்பு - உணவில் கரைந்து சுவையூட்டுகிறது. ஒளி - தன்னையே அழித்து ஒளியூட்டுகிறது. அத்தகைய உப்பைபோல் ஒளியைப்போல் பிறர் நலமும் தியாகமும் கொண்டவர்களாய் வாழ நம் தாய் திருச்சபை இன்றைய வழிபாட்டின் வழியாக நம்மை அழைக்கிறது.

நாம் சாரமுள்ள உப்பா? அல்லது சாரமற்ற உப்பா? நாம் ஒளியின் மக்களா? அல்லது இருளின் மக்களா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய திருப்பலி.

நம் வாழ்வு, நமக்கு அடுத்து இருப்போரின் வாழ்வுக்கு சுவை சேர்ப்பதாய், பிறரை அழிவிலிருந்து காப்பதாய், நற்பண்பின் அடையாளமாய் அமைய வேண்டும் என்ற உயர்ந்த வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைக்கிறது இன்றைய வாசகங்கள்.

உலகின் ஒளியாய் விளங்கும் இயேசுவின் ஒளியை நம் இதயங்களில் ஏற்றுவதால் நாமும் அவ்வொளியை பிரதிபலிக்கும் பொய்யா விளக்குகளாய் மாறுகிறோம் என்பதை உணர்ந்து, வறியவரின் தேவைகளை நிறைவு செய்து, வேதனையில் இருப்போருக்கு ஆறுதல் வழங்கி வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

உண்மையான நோன்பின் குறிக்கோள் எது என்பதையும், நாம் ஒளியின் மக்களாக வாழ என்ன செய்ய வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கும் எசாயாவின் இறைவாக்கு இன்றைய முதல் வாசகமாக அருளப் பட்டுள்ளது. பிறரை அன்பு செய்து பகிர்ந்து வாழும்போது நமது வாழ்வு ஒளிமயமான வாழ்வாக மலர்கிறது என்பதை எடுத்து ரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

வல்லமை அளிப்பவர் ஆவியானவரே என்பதை இத்திருமுகம் வாயிலாக எடுத்துரைக்கிறார் பவுலடியார். நாம் நமது வலுவின்மையை ஏற்றுக்கொள்ளும் போது தான் இறைவனுடைய வலிமை துணை நிற்கிறது. நாம் எவ்வளவு பெரிய அறிஞராக இருந்தாலும் இறைவனுடைய ஞானத்திற்கு முன் நாம் அறிவிலிகள் என்பதையும், நமக்கு வலுவூட்டி வல்லமை அளிப்பவர் தூய ஆவியானவர் என்பதை யும் எடுத்துக்குரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்டு கருத்தில் கொண்டு வாழ்வோம்.

## மன்றாட்டுகள்

1) வாழ்வளிக்கும் இறைவா, உம்மைப் பற்றிய மறைபொருளை மக்கள் மத்தியில் அறிவிக்க உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட உம் திரு அவையின் தலைவர்கள், தூய ஆவியா னவரின் வல்லமையைப் பெற்று, உலகின் உப்பாகவும், ஒளியாகவும் விளங்கிட அருள் தாரும். அவர்கள் யாவரும் நல்ல ஆரோக்கியத்துடனும், ஆற்றலுடனும், ஞானத்துடனும் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நெருப்புத் தூணாய், மேகத்தூணாய் இருந்து வழி நடத்திய இறைவா, பசியால் வாடுவோர்க்கு உணவு கொடுத்து உதவுதல், வீடு வாசலின்றி தவிப்போரை ஆதரித்தல், ஆடையின்றி அவதிப்படுவோர்க்கு உடுத்த உடை கொடுத்து மானம் காத்தல், அடுத்தவரை குற்றம் சாட்டி பேசாதிருத்தல், இவை யாவும் நீர் விரும்பும் நோன்பு என்பதை நாங்கள் உளமாற உணர்ந்து அவற்றை கடைப்பிடித்து வாழ வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

3) வல்லமையும், ஞானமும் வழங்கும் அன்பு இறைவா, அரசுத் தேர்வு எழுத தம்மையே தயாரித்து வரும் எம் பங்கில் உள்ள பிள்ளைகளை உம் திருக்கரங் களில் ஒப்படைக்கிறோம். அவர் களுக்கு நல்ல ஞாபக சக்தியையும், சிறந்த ஞானத்தையும் தெளிந்த அறிவையும் தந்தருள வேண்டுமென் றும், அவர்கள் தேர்வுகளை சிறப்பாக எழுதி உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்று வெற்றியடைய வரமருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அளவு கடந்த அன்பை எம்மேல் பொழியும் அன்பு இறைவா, உணவில் கரைந்து சுவையூட்டும் உப்பைப்போல், தன்னையே அழித்து ஒளியூட்டும் ஒளி யைப்போல் நாங்கள் பிறர் நலமும் தியாகமும் கொண்டவர்களாய் வாழவும் நாங்கள் மேற்கொள்ளும் எல்லா செயல்களும் உமது அருளால் நற்காரியங்களாக மாறவும், உமது பிரசன்னத்தை எங்கும் விதைக்கும் இறையரசு கருவிகளாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் -31

**சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு**

### குறள் விளக்கம்

**அறம் சிறப்பையும் அளிக்கும்: செல்வத்தையும் அளிக்கும்: ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறு யாது?**

### சிந்தனை

அறம் செய்ய விரும்பு என்று ஔவையார் சொல்லுகிறார். அறம் செய்வதற்கு உனக்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் சரி, இயலாமல் இருந்தாலும் சரி, விருப்பமாவது இருக்க வேண்டும். ஏனென்றால்;, இந்த அறத்தினால் ஒருவருக்கு சிறப்பு, செல்வம் அனைத்து நலன்களும் கிடைக்கிறது என்று வள்ளுவர் கூறுகின்றார். எனவே தான் அனைவரும் அறம் ஒரு மனிதனுக்கு முக்கியமானது. அறம் இருந்தால் தான் மனித வாழ்க்கை சிறப்படைய முடியும் என்ற ஒரு கருத்தை சொல்கின்றனர்.

ஜப்பானில் நடந்த உண்மை சம்பவம் இது. வீட்டுக்குக் குடிவந்த புதிதில் ஒரு மரத்தடுப்பில் ஒரே ஒரு ஆணி அடித்திருந்தார் ஒருவர். சில மாதங்களுக்கு பிறகு அந்த மரத்தடுப்பின் பின்புறம் பார்த்தவர் அதிர்ந்தார். அந்த தடுப்பின் பின்னால் ஒரு பல்லியின் காலில் அந்த ஆணி ஏறியிருந்தது. எங்கும் நகராமல் இத்தனை காலம் இந்தப் பல்லி எப்படி உயிர் வாழ்கிறது? சிறிது நேரம் கவனித்தார். எங்கிருந்தோ ஒரு பல்லி வந்தது. அதன் வாயிலிருந்த உணவை இந்த பல்லிக்கு ஊட்டியது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பரிவுணர்ச்சி பல்லிகளுக்கு இருப்பது பெரிய விஷயம் தானே!

கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையை பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார் - திப 10:38. ஆண்டவர் இயேசு சென்ற இடமெல்லாம் நல்லதை செய்து கொண்டே சென்றார் என்கிறது நற்செய்தி. மனிதர் நம்மிடம் எதிர்பார்ப்பதும் நாம் நல்லதைச் செய்ய வேண்டும் என்பதைத்தான். எனவே நாம் எப்போதும் நல்லதையே நாடக்கூடியவர்களாக நன்மையே செய்யக்கூடியவர்களாகவும் இருந்தால் அது ஒரு சிறப்பான பண்பு ஆகும்.

நிறைவுடன் வாழ இரு வழிமுறைகள் தென்படுகின்றன

1. எதையும் அருஞ்செயலாகப் பார்க்காத புறக்கணிப்பது

2. யாவற்றையும் அருஞ்செயலாகப் பார்த்து பரவசமடைவது

என்கிறார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். சின்னச் சின்ன செயல்களில் பிறரன்பைக் கலந்த அருஞ்செயலாக மாற்றுவோம். அதுவே அறமாகும்.

பெறுவதை விட கொடுப்பதில் இன்பம் காண்போம். ஏனெனில் ஏழை எளியவரோடு பகிர்ந்தலே அறம். எடுப்பதில் அன்று, கொடுப்பதில் அமைகிறது வெற்றியின் இரகசியம். பெற்றுள்ள பதவி வெற்றியை நிர்ணயிப்பதில்லை. ஆற்றும் தொண்டுகளே நம் சாதனைகளாக நிலைக்கின்றன. முதன்மை அடைய விரும்பும் எவரும் பணிவிடை செய்யும் பாதையைத் தேர்ந்தெடுக்க அறிவுறுத்துகிறார் இயேசு. திருப்பித்தர இயலாதவரின் தேவைகளை நிறைவேற்றுபவர் தொடுவது வெற்றியின் சிகரம் திருத்தந்தை பிரான்சிஸ், பொது சந்திப்பு, செப்டம்பர் 19, 2021.

சிறிய பல்லி கூட நற்செயல் செய்து வாழ கற்றிருக்கும் போது, மனிதர்களாகிய நாம் இன்னும் பரந்த மனம் கொள்வோம். நாளுக்கொரு நற்செயல் செய்ய நம்மை பழக்கப்படுத்திக் கொள்வோம். பின்னாளில் அதுவே நம் இயல்பாகிவிடும்.



சகோதரி. ரோசி. காங்கேயம்
புனித காணிக்கை அன்னை சபை

# பெண் தொழிலாளர் உரிமைகள்

பொதுவாக தொழிலாளர் என்றால் இருபால் தொழிலாளர்களையும் குறிக்கும். தொழிலாளர் சட்டங்கள் அனைத்தும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவையே. அதேவேளை, பெண் தொழிலாளர் மற்றும் இளம் தொழிலாளர்களுக்கென தொழிலாளர் சட்டங்களில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தொழிற்சாலைகள் சட்டம் 1948

தொழிற்சாலைகள் சட்டம் 1948 இன் பிரிவு 71ன் படி பெண் குழந்தைத் தொழிலாளர்களை இரவு 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை வேலை செய்யக் கூறுவதோ, அனுமதிப்பதோ கூடாது. 15 - 18 வயதுக்குட்பட்டோர் குழந்தைத் தொழிலாளர் ஆவர்.

பிரிவு 66ன் படி, இரவு 7 மணி முதல் காலை 6 மணி வரையிலும் பெண்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது.

இச்சட்டத்தின் பிரிவு 22 மற்றும் 27-இன் படி ஆபத்தான எந்திரங்கள் இயங்கிக் கொண்டிருக்கும்போது, அவை தொடர்பான வேலைகளில் குறிப்பாக சுத்தம் செய்தல், எண்ணெய் போடுதல், திருகாணிகளை சரி செய்தல் போன்ற வேலைகளில் பெண்களை ஈடுபடுத்தக் கூடாது.

தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 87-ன் படி எந்தவொரு தொழிலும் உடல் தீங்கு, நச்சுத்தன்மை அல்லது நோய்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளது என்று மாநில அரசு கருதமானால் அத்தொழில்களை ஆபத்தான தொழில்கள் என அறிவிக்கலாம். இவ்வாறு அறிவி;க்கப்பட்ட ஆபத்தான தொழில்களில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது.

பிரிவு 48-இன் படி முப்பதுக்கும் மேற்பட்டப் பெண்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் போதுமான வசதிகளுடன் கூடிய குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். கழிப்பிடங்கள் இருக்க வேண்டும்.

பிரிவுகள் 51, 54

மற்றத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வு நேரத்தைக்காட்டிலும், கைக்குழந்தை உடைய தாய்மார்களுக்கு சம்பளத்தில் பிடித்தம் எதுவும் செய்யாமலேயே கூடுதலான ஓய்வு நேரங்கள் வழங்கப்பட வேண்டும். இந்த கூடுதல் ஓய்வு நேரம் குழந்தையை கவனிப்பதற்காக ஒதுக்கப்படுகிறது.

இதுதவிர, பெண்கள் வேலை செய்யும் நேரங்களை மாற்றியமைக்கும் மாற்று முறைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது. எனினும் வார விடுமுறை நாட்களை அடுத்துவரும் வேலை நாளில் இத்தயை மாற்று முறைகளில் வேலை பார்க்குமாறு கோரலாம்.

மேலும், பெண் தொழிலாளருக்கு வழங்கப்படும் ஊதியத்துடன் கூடிய வருடாந்த விடுப்பிற்காக, முந்தைய ஆண்டில் அவர் வேலை செய்த மொத்த வேலை நாட்களை கணக்கிடும் போது அத்தொழிலாளி 12 வாரங்களுக்கு மிகாமல் எடுத்த பேறுகால விடுப்பினை வேலை செய்த நாளாகக் கணக்கிட வேண்டும்.



திருப்பலி வாசகங்கள்

# பொதுக்காலம் 5–ஆம் வாரம்

05.02.2023
முதல்
12.02.2023

**05.02.2023 – பொதுக்காலம் 5–ஆம் வாரம் ஞாயிறு**

முதல் வாசகம் : எசாயா 9:1–4
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 2:1–5
நற்செய்தி : மத்தேயு 5:13–16

**06.022023 – திங்கள் கிழமை**

முதல் வாசகம் : தொடக்கநூல். 1:1–19
நற்செய்தி : மாற்கு 6:53–56

**07.02.2023 – செவ்வாய் கிழமை**

முதல் வாசகம் : தொடக்கநூல் 1:20–2:4அ
நற்செய்தி : மாற்கு 7:1–13

**08.02.2023 – புதன் கிழமை**

முதல் வாசகம் : தொடக்கநூல் 2:4ஆ–9, 15–17
நற்செய்தி : மாற்கு 7:14–23

**09.02.2023 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : தொடக்கநூல் 2:18–25
இரண்டாம் வாசகம் : மாற்கு 7:24–30

**10.02.2023 – வெள்ளிக்கிழமை**


முதல் வாசகம் : தொடக்க நூல் 3:1–8
நற்செய்தி : மாற்கு 7:31–37

**11.02.2023 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : தொடக்க நூல் 3:9–24
நற்செய்தி : மாற்கு 8:1–10

**12.02.2023 – ஞாயிறு**
***பொதுக்காலம் 6ஆம் வாரம்***

முதல் வாசகம் : சீராக்கின் ஞானம் 15:15–20
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 2:6–10
நற்செய்தி : மத்தேயு 5:17–37



Do not try to excuse your faults; try to correct them. ...

- St. John Bosco -

நலம் தரும்

# இயற்கை வளம்



உறவுகளே இனிய வணக்கம். இன்றைய நலக்கல்வி..!

ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

## திருநீற்றுப் பச்சிலையின் மருத்துவ பயன்கள்!



பூக்களுக்கு மணம் உண்டு என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்.
ஆனால் சில செடிகளில் இலைகளும் மணம் வீசுவதுண்டு.
அப்படியொரு சிறப்புப் பெற்றது திருநீற்றுப் பச்சிலை.
இந்தச் செடிகள் மலைப்பிரதேசங்களில் அதிகம் வளர்வதுண்டு.
தமிழ் நாட்டில் சில கோயில்களில் வளர்த்து வருகின்றனர்.
இதன் பயன்களைப் பற்றி பார்ப்போம்!
நறுமணம் வீசும் இந்தச் செடியின் இலைகளை அரைத்துப் பூசினால் கட்டிகள் கரையும்.
வெறுமனே இலையை முகர்ந்து பார்த்தால் தலைவலி
இதயநடுக்கம் தூக்கமின்மை சரியாவதுடன் மூக்கில் வரும் வியாதிகள் சரியாகும்.
இலைச்சாறுடன் சம அளவு தேன் கலந்து சாப்பிட்டால்
மார்புவலி இருமல் வயிற்று வாயு பிரச்னைகள் சரியாகும்.
திருநீற்றுப்பச்சிலையின் இலையை மென்று சாப்பிட்டால் வாய்வேக்காடு சரியாகும்.

தேள் கடிப்பதால் வலி ஏற்படும்போது அதன் கடிவாயில் திருநீற்றுப்பச்சிலையை கசக்கி பூசினால் வலி குறையும்.

காது வலி காதில் சீழ் வடிதல் போன்ற பிரச்னைகளுக்கு இலைச்சாறு சில சொட்டுகள் விட்டால் நிவாரணம் கிடைக்கும்.

முகப்பருவை விரட்ட திருநீற்றுப்பச்சிலை சாறுடன் வசம்பு சேர்த்து அரைத்துப் பூசினால் பலன் கிடைக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள் பச்சிலைச்சாறு சாப்பிட்டால்
பிரசவத்தின்போது ஏற்படக்கூடிய கடுமையான வலிகள் குறையும்.
அதேபோல் இதன் விதையை பிரசவத்துக்குப்பிறகு சாப்பிட்டு வந்தால்
பிரசவத்தால் ஏற்பட்ட வலி குறையும்.
பச்சிலை விதையை கசாயம் செய்து குடித்து வந்தால்
சுறுசுறுப்பு கிடைப்பதோடு மூத்திரக்கோளாறுகள் சரியாகும்.
திருநீற்றுப்பச்சிலை விதையை சப்ஜா விதை என்பார்கள்.
இதில் செய்த சர்பத்தை குடித்து வந்தால்
சீதபேதி வெள்ளை வெட்டைச்சூடு இருமல் சரியாகும்.
5 கிராம் விதையை 100 மில்லி தண்ணியில் 3 மணி நேரம் ஊற வைத்து
குடித்து வந்தால் வயிற்றுக் கடுப்புஇ ரத்தக்கழிச்சல்இ நீர் எரிச்சல் நீங்கும்.

நன்றி உறவுகளே... என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**